என்று சொன்னேன். ஆகவே, இந்த மினி பஸ்கள் விடுகின்ற இடத்திலே, இவர்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்கள் தனியாக பேருந்துகள் விடப்படுவது பற்றி கேள்வி கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பேருந்துகள் விடுவது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், தனியார்களுக்கு கொடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலே பல சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. யார் மனு போட்டிருந்தாலும், அதை பரிசீலனை செய்து 57 (2)-லே நோட்டிபை செய்து, அதற்குப் பின்னர் அதை 57 (3)-லே நோட்டிபை செய்து, முறைப்படி ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, யார் நேரடியாக மனுக்கள் போட்டிருந்தாலும், அவைகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே இதை இணைத்துப் பேசுவது என்பது முடியாத காரியம்.

493—

மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 17233—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மேற்கு தஞ்சை மாவட்டத்தில், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆதி திராவிடர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தமிழ் நாடு குழாய்க் கிணற்றுக்கழகம் தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். டெல்டா ஏரியா அல்லாத பகுதிகளிலும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா ? சமுதாயக் கிணறுகள், பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட் மூலமாக அமைக்க உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், காவிரி டெல்டா பகுதிகளான திருவையாறு, கும்பகோணம், திருவிடமருதுர், ஆகிய இடங்களில் முழு அளவிலும், பாபநாசம், வலங்கைமான் ஆகிய இடங்களில் பகுதி அளவிலும், இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற டெல்டா பகுதியல்லாத ஏரியாக்களான ஒரத்தநாடு, திருவோணம் போன்ற பகுதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் இந்தத் திட்டம் மேற்கண்ட 5 பகுதிகளில்தான் தற்போது அமுல்படுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை எங்கே அமுல்படுத்துவது என்பது பற்றிய ஒரு விவரமான அறிக்கையை நிலநீர் தலைமைப் பொறியாளர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையின் அடிப்படையில் மேற்கு தஞ்சையில் மேற்படி பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடு.

494—

*வினா எண் 20616—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு வடபகுதி ஆற்றிலிருந்து வரும் முகப்பில் மணல்மேடிட்டுக் கிடப்பதால் தண்ணீர் வீணாவதுடன் பக்கத்திலுள்ள விளைநிலங்களும் பாதிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?